ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1416/22 - 2005 ඔක්තෝබර් 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2005.10.27

1416/22 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 21/78

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 23 (2) ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்,

செயலாளர்,
பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2005, ஒற்றோபர் 01.

### கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2005.10.01 ஆந் தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. 2004, ஒகத்து 05 ஆந் தேதிய 1352/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2004 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கத்தால் திருத்தப்பட்டவாறான 1990, சனவரி 05 ஆந் தேதியன்று 591/18 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழகங்கள் கட்டளைச் சட்டம் 16 ஆம் பந்தியில் இப்பந்தியின் (5) ஆம் உட்பந்தியை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :

"(5) கல்விப் பீடம் பின்வரும் கற்கைத் துறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி ;

(ii) ஆரம்பகால சிறுபராய மற்றும் முதனிலைக் கல்வி ; அத்துடன்

(iii) விசேட தேவைகள் கல்வி."

11-223

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.